# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற் பெட்டி இலக்கம்: 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ தை 1977 — இதழ் - 13


## உழவுத் தொழிலின் உயர்வு



உழவுத் தொழிலின் உயர்வைப் பற்றித் திருவள்ளுவரும், ஏர் பிடிப்போரின் ஏற்றத்தைப் பற்றிக் கம்பரும் இருவேறு காலங்களில் போற்றியிருக்கிறுர்கள். தன்குடி உயர்தற்குரிய காரியத்தைச் சலியாது ...ப்பவனுக்கு மேலான பெருமை உண்டாகும் என்று குடி ...யல்வகை கூறியபின், திருவள்ளுவர் உழவுத்தொழிலின் திறத்தைக் கூறினர். அஃது இல்லாவிட்டால் வருவ தாகிய வறுமையை அடுத்து நல்குரவு என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.



இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்கள் பனம் விதைகளை உபகரிக்கிறுர்கள்.

உழுதற்றொழில் குடியுயர்த்துதற்கு ஏது என்பர். ஏர் பிடித்து உழுவார் வழியிலே உலகம் நடக்கிறது. உழவுத் தொழிலே உலகில் முதன்மையானது. வேறு தொழில்கள் செய்வாரையும் உழவர் தாங்குவதால் அவர்கள் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்கள். உழவுத் தொழிலால் விளைவைப் பெற்று உண்டு வாழ்பவரே உண்மையான வாழ்வு வாழ்பவர். ஏனையோர் எல்லோரும் பிறரைத் தொழுதுண்டு வாழ்பவர். உழவர் தங்கள் நெற்கதிரின் நிழலில் அதிகாரிகளையும் வாழவைப்பர். அவர்கள் பிறரிடஞ் சென்று எதனையும் இரந்து வேண்டாது, தாமே பிறருக்கு உபகரிப்பவராவர். உழவர் இல்லாவிட்டால் துறவறத்தினரும் தம் நெறியில் நிற்பது அருமை.

உழுதலிலும் உரமிடுதல் நல்லது. அதனிலும் நல்லது களையெடுத்தல். அதனிலும் நல்லது நீர்பாய்ச்சுதல். அதனிலும் நல்லது மிருகங்கள் அழிக்காமல் பாதுகாத்தல். எனவே மனைவியைப் பாதுகாக்கும் கணவனைப் போல

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)



★ ★ உழவர் மலர் ★ ★

உ

## கடவுள் வணக்கம்

திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்

திருப்பயற்றூர் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பார்த்தனுக்கருளும் வைத்தார் பாம்பரை யாடவைத்தார்
சாத்தனை மகனுவைத்தார் சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாடவைத்தார் கோளரா மதியநல்ல
தீர்த்தமுஞ் சடையில் வைத்தார் திருப்பயற் றூரனுரே.

திருப்பயற்றூர் என்னும் திருப்பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவன், பஞ்சபாண்டவருள் ஒருவனுகிய அர்ச்சுனனுக்கு அருள்செய்தவர். தமது திருவரையிலே பாம்பினைக் கச்சாக அணிந்து அதனை ஆடச்செய்தவர். ஐயனுர் என்னும் அரிகர புதல்வனைச் சாத்தனுர் என்றும் பெயர் வழங்கத் தம் மைந்தனுகக் கொண்டவர். காளிதேவியை ஆடவைத்துச் சாமவேதமும் பாடித் திருக்கூத்தாடியருளியவர். வலிமை வாய்ந்த பாம்பினையும், சந்திரனையும் நல்ல தீர்த்தமாய கங்கையையும் தமது சடாபாரத்திலே வைத்தருளியவர். ★




## தெரிந்து தெளிதல்

**நண்பர்கள் பணியாளர் முதலானோரை ஆராய்ந்து அவர்களிடம் நம்பிக்கை வைத்தல்.**

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

நல்லகுடியில் தோன்றிக் குறையில்லாது பழிக்கு அஞ்சும் நாணம் உடையவனிடம் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும்.

**The Choice of friends and Employees**

The Choice should be only of him who, born of a good family, is free from faults and dreads dishonour.

(முன்பக்கத் தொடர்ச்சி)

## உழவுத் தொழி.......

உழவன் வயலைப் பாதுகாத்தல் வேண்டும். நாம் வறுமையாக இருக்கிறேம் என்று வருந்துவோரைப் பார்த்து, நிலமாகிய பெண் சிரிக்கும். ஆதலால் யாவரும் உழவுத் தொழிலை முதன்மையாகக்கொள்ளுதல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

உழவர்களை வாழ்த்தவும் உழவுத்தொழிலைப் போற்றவும் எங்கள் காலத்தில் வாழும் தமிழ் நாட்டுக் குழந்தைக் கவிஞர் பெருமான் அழ. வள்ளியப்பா அவர்களின் மழலை மொழி போதும்.

உண்ண உணவு தந்திடும்
 உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
 வளர்க்கும் உழவர் வாழ்கவே

ஒன்றை நூறு நெற்களாய்
 உண்டுபண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
 நனைந்துபோக உழைப்பவர்

பாடுபட்டு உழுபவர்
 பலனுங் கண்டு மகிழ்பவர்
நாடு வளர வாழ்பவர்
 நன்கு வாழ்க வாழ்கவே.

## இயற்பகைநாயனுர்

இல்லையேயென்னுத இயற்பகைக்கும் அடியேன் என சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பெற்ற இயற்பகை நாயனுர் செயற்கரிய செய்த சிவதர்மவள்ளல். எவர் என விரும்பிக்கேட்ட போதிலும் அவரவர் விரும்பியதை இல் என்று மறுக்காமல் ஈந்து தம் ஈகையில் இறைவன் வெளிவரக்கண்ட இல்லறத்துப் பெருஞானி அவர். அவரின் ஈகையை வெளியுலகத்தாருக்குக் காட்டியருளவும், அவரின் மனைவியாரை ஆன்மநாயகரர்க நேரில் ஆட்கொண்டருளவும் திருவுளம் கொண்ட இறைவன் அடியார் வேடத்தில் எழுந்தருளி வந்து நாயனுரிடம் ஒரு பொருளை இரந்தார். எதுகேட்டாலும் தருவேன் என்று கொடியுயர்த்திய நாயனுரிடம் வந்தவர் உம்முடைய மனைவியைத் தாரும் என்றுர். தந்தேன் அழைத்துப் போமின் என்று தயக்கமின்றித் தம் மனைவியரை அடியவரிடம் ஒப்படைத்தார். அடியவர் மனையாளை அழைத்துச்சென்றபோது உறவினர் தடுத்தனர். எனவே தடுத்தவர் அநேகரைக் கொன்று குவித்து அடியாரை அச்சமின்றிப் போகுமாறு செய்தா இயற்பகையார். அவ்வேளை வந்த அடியவர் மறைந்ததும் அன்பர் கண்காண இடபாரூடராய்த் தேவியாரோடு காட்சிகொடுத்து எல்லோருக்கும் பேரின்ப வாழ்வளித்தருளினுர் இறைவன். செயற்கரிய செய்த இயற்பகை நாயனுரின் திருநாள் 11-1-77 செவ்வாய்க்கிழமை வருகின்ற உத்தர நன்னுளாகும். ★

★ மேட்டு நிலத்தில் வீட்டைக் கட்டு ★

# தைப்பூசம்

தை மாதத்தில் வருகின்ற பூசத்திருநாள் பூரணையோடு பொருந்தி வருவது. அது ஒரு புனித நாளாகப் புராதனகாலம் தொட்டுப் போற்றப்பெற்று வருவதாகப் புராணங்கள் கூறுகின்றன. பழந்தமிழ் நாட்டிலே நிலவிய விழாக்களுள் தைப்பூசவிழாவும் ஒன்று. அதன் சிறப்பினைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வெகுவாகப் போற்றியுள்ளார். நேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் என்பது பெருமானது தேவாரத் தொடராகும்.

தை மாதத்திலே பூரணையோடு பொலிந்துவரும் பூசத் திருநாள் குருவாரமாய வியாழனாயின் வெகு சிறப்புள்ளதாகும். பூரணை, வியாழன், பூசம் மூன்றும் இம்முறை சேர்ந்து வருகின்றன. இத்தகைய ஒரு நாளிலே சித்தயோக தினத்திலே மத்தியான வேளையிலே ஆயிரம் முகத்தையுடைய பானுகம்பர் ஆயிரஞ் சங்குகளை அயராது முழக்க, ஆயிரந்தோள்களையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்ப, பஞ்ச துந்துபியொலியும் வேதவொலியும் கந்தர்வர்களுடைய கீதவொலியும் எங்கும் சூழ்ந்தொலிப்ப, சிவபெருமான் உமாதேவியாருடன் ஞானசபையிலே நின்று ஆனந்த நடனஞ் செய்தருளினார்.

சிவபெருமான் செய்தருளிய அற்புதக் கூத்தை, வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவரும், பதஞ்சலியாக எழுந்தருளிய ஆதிசேடனும். பிரமா, விட்டுணு முதலிய தேவர்களும், திருவிடையந்தணர் என்னும் தில்லை மூவா...வரும் ஏனைய பூதர்களும் பிறரும் கூத்தப் பெருமா...ன் திருவருளினாலே ஞானக்கண்ணைப் பெற்று, எல்லை...யாத ஆனந்தத்தோடு தரிசித்தார்கள்.

அவர்கள் சிவபெருமானின் அதி அற்புதத் திருக்கூத்தைத் தரிசித்து, உரோமம் சிலிர்ப்ப, நெஞ்சு நெக்குருக, ...ண்ணீர் பொழியச் சிவானந்தக்கடலில் மூழ்கினார்கள். ...தஞ்சலி முனிவர் இறைவனைப் பணிந்து வேண்டிக் கொண்டதற்கு உருகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுக் கனகசபை என்னும் பொற்சபையிலே ஆடிக்கொண்டிருக்கிறார். ★

## விருப்பத்தக்கவை - மனத்துக்குகந்தவை

| | |
|---|---|
| இனியகாட்சி | தெய்வபக்தி |
| செல்வாக்கு | உற்சாகம் |
| தனலாபம் | பொறுமை |
| மனோதிடம் | நூற்பயிற்சி |
| சத்சங்கம் | பொருள்வரவு |
| உழைப்பு | தர்மசிந்தை |
| பதவிமேன்மை | நல்லுணவு |

மக்கட் குழுவெல்லாம் மக்கட் கூட்டுறவு ஆகிவிடமாட்டாது. மனிதர் முகங்களெல்லாம் அக உணர்ச்சியின் தோழமைத் துணைகள் ஆகிவிடமாட்டா.

— பிரான்ஷிஸ் பேக்கன்

# நற்சிந்தனை

— யோகசுவாமிகள் —

## Sayings of Yogaswami

### சன்மார்க்கம்

ஒரு கமக்காரன் தன்னுடைய நிலத்திலே நல்ல வித்தையிட்டு அதிலுண்டாகும் களையைக் களைந்து, விளையுந் தானியத்தை ஒன்று சேர்க்கின்றான். அதுபோலப் பக்தனும் சிவமாகிய நிலத்திலே பக்தி என்னும் வித்தை வித்திக் காமக் குரோத மோக மதமாற் சரியமென்னும் களையைக் களைந்து சிவபோகமென்னுந் தானியத்தைச் சேர்த்துவைத்துப் புசிக்கிறான்.

### Seek the profit of the Soul.

*A farmer sows good seed on his land, pulls out all the weeds growing among the plants and finally gathers the grain. In the same way, the bhakta sows the seed of devotion in the field of god, roots out the weeds of lust, anger, desire, pride and envy, gathers in the grain of heavenly bless, and lives in enjoyment of it.* ★

சுக்கிர நீதி

## அரசுக்குரிய குணங்கள்

1. அரசு குடிகளுக்குத் தந்தைபோலக் குணங்களைப் பயிற்றும்.
2. அரசு குடிகளைத் தாயைப்போலக் காத்தருளும்.
3. அரசு ஆசிரியனைப் போலக் குடிகளுக்குக் கல்வி புகட்டும்.
4. உடன்பிறந்தான் சகோதரருக்கு உதவுவதுபோல அரசு உதவும்.
5. அரசு நண்பனைப் போல உதவிசெய்து சுற்றமாகிறது.
6. அரசு குபேரனைப் போலக் கொடுத்து உதவி செய்கிறது.
7. அரசு தண்டஞ் செய்வதால் இயமனைப்போல் இருக்கும்.
8. வலிமையும் பொறுமையும் உள்ள அரசே அரசு.
9. பணிவுடைய அரசே மற்றவரைப் பணியச்செய்யும்.
10. தான் ஒழுக்கமில்லாத அரசு மற்றவரை ஒழுங்காக்க முடியாது.
11. அடக்கம் இல்லாத அமைச்சரால் அரசு திருவிழக்கும்.

மில்க்வைற் செய்தி - 13
புதுவருடக் கலண்டர்
பெற விரும்புவோர்
மில்வைற் தயாரிப்புக்களின்
எதுவாயினும் 2 மேலுறைகள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

★ கால போசனம் சாலவு நன்று ★



# எங்கள் நன்றியும் வாழ்த்தும்

பழகிய ஆண்டு கழிந்து புத்தாண்டு பிறக்கிறது. பழகிய ஆண்டில் எம்மோடு பழகி எமக்குப் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எங்கள் இருதய பூர்வமான நன்றி உரித்தாகுக.

நாம் நாட்டுக்கு நன்மை பயக்கும் எனக் கருதிச் செய்த தொண்டுகளுக்கெல்லாம் நமக்குப் பக்கபலமாக நின்று கை கொடுத்தவர்களுக்கு நாம் கைகூப்பி வணக்கம் சொல்லுகின்றோம்.

எமது உற்பத்திகளுக்கு மூலதனம் எமதேயாயினும், வேளையறிந்து வேண்டும் போது எமக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தந்த பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தாருக்கும், எண்ணை உதவும் ஆலைகளுக்கும் எம் நன்றி.

மெய் வருத்தம் பாராது பசி நோக்காது தம் சொந்த வேலைபோல வேலைபார்க்கும் எம் தொழிலாள அன்பர்களுக்கு, அவர்கள் செய்யும் பணிக்கு எம் பணிவான அன்பு உரியதாகுக.

எங்கள் தயாரிப்புகளை நல்லமுறையில் விநியோகஞ் செய்வதற்கு வேண்டிய காகிதங்கள், மட்டைகள், பெட்டிகள் முதலிய உபகரணங்களை விநியோகஞ் செய்கின்றவர்களுக்கும், எமது விளம்பரங்களைக் கவர்ச்சிகரமாக வெளியிட்டுப் புகழ்பரப்பும் பத்திரிகையாளர்களுக்கும், எமது பிரசுரங்களை உரியவேளையில் அழகாக வெளியிட உதவி செய்யும் அச்சகத்தாருக்கும் எம் நன்றி.

எம் உற்பத்திகளுக்கு அன்றும், இன்றும், என்றும் அமோக ஆதரவளித்து எம்மை மேலும் மேலும் அறப் பணி செய்ய ஊக்குவிக்கும் ஆதரவாளர்களுக்கும் வாடிக்கையாளருக்கும் எம் நன்றி.

எமக்குத் தேவையான சித்திரங்கள் படங்களை வரைபவருக்கும், அழகாக புளக் தயாரிப்பவர்களுக்கும் எம் நன்றி.

பனையை வளர்த்துப் பயனைப் பெறுவோம் என்று நாம் கொடியுயர்த்திப் பனைப் பிரசாரஞ் செய்யும்போது பலவகையிலும் உதவிசெய்து பனைவளம் பெருக்கப் பல்லாயிரமாகப் பனம் விதைகளை அள்ளி அள்ளி உபகரிக்கும் பாடசாலைப் பிஞ்சுக் கரங்களுக்கும் சங்கங்கள், சபைகள், நாடாளுமன்ற உறுப்பினர், பனந்தோப்புக்காரரின் பண்பட்ட உள்ளத்துக்கும் எம் நன்றி.

குளந்தொட்டு வளம் பெருக்கும் குலதர்ம வழியில் தூர்ந்துபோன குளங்களைத் துப்புரவாக்கும் பணியில், சிரமதானஞ் செய்து சீரிய சேவை செய்தவருக்கும், வட பிரதேசத்தில் பல குளங்களைத் தூர்வு நீக்க உதவிய அன்பர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர், உள்ளூர் ஆட்சி உறுப்பினர் ஊழியர் யாபேருக்கும் எம் நன்றி. இத்துறையில் எமக்குப் பக்கபலமாய் ஒத்துழைத்த சனசமூக நிலையங்கள், இந்துசமய மன்றங்கள் எல்லோருக்கும் எம் நன்றி.

சோலையும் மலையும் மழைக்குக் காரணம் என்பதால் மலைகளில்லாத எங்கள் பிரதேசத்திலே மரங்களே எமக்குத் தஞ்சம் என்ற முறையில் மரங்களை நடுவதற்கு நாம் பல வருடங்களுக்கு முன்னரே எடுத்துக்கொண்ட பணிக்கு உதவியாக நின்றும், உபகரித்தும், எமது உபகரிப்பை ஏற்றுப் பிரதேசமெங்கும் மரங்களை நாட்டியும் நாட்டுப் பணி புரிந்தவர்களுக்கு எம் நன்றி.

மரம் நாட்டும் பணியில் பக்கபலமாய் நின்று, கல்லூரி வளவுகள், கோயில் வீதிகள், தெருவோரங்கள், எங்கும் தோளோடு தோள்நின்று சேவைசெய்ய உதவிய தொண்டர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், அதிபர்களுக்கு எம் நன்றி

இன்னும் வடமாநிலத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உள்ளூர் ஆட்சிச் சபைகள் ஆகியோருக்கும் எம் நன்றி.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மரம் நாட்டும் பணியில் உதவியாய் நின்ற விசேட ஆணையாளர், ஆணையாளர், பொறியியலாளர், சுகாதார அதிகாரி, மேற்பார்வையாளர், தொழிலாளர் எல்லோருக்கும் எம் நன்றி.

நெஞ்சையுருக்கும் இந்நினைவுகள் யாவும் இனி எக்காலத்தும் நிற்கவேண்டும். சென்ற ஆண்டின் பழுதிலாத் தொண்டு இனி எதிர்காலத்தும் தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். அதற்கு உங்கள் உதவியும் ஒத்துழைப்பும் வேண்டும். உங்கள் சிரமதான உபகரிப்பும் வேண்டும். இவையெல்லாம் செய்து நிறைவேற்ற நீங்கள் வாழ வேண்டும். தொண்டு வளரவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

"அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

## மதத்தில் பெருமை

மனிதப்பிறவி எடுத்தமையில் பெருமைப்படுவதைவிட இந்து மதத்தில் பிறந்ததற்காகப் பெருமைப்படுபவரும் உளர். பிறப்பு, மறுபிறப்பு, கர்மா என்பனவற்றுக்கு இந்துமதம் ஒன்றே தகுந்த வியாக்கியானங்கள் கூறியுள்ளது. நாம் பார்க்கின்ற பொருள்கள் உருமாறிப்போவனவல்லாமல் அழியமாட்டா என்பது விஞ்ஞான உண்மை. இதனை இந்துமதம் அழகாகக் கூறியுள்ளது. ★

## பெரிய இடத்திற் செய்யக்கூடாதவை

பெரு நகைபுரிதல், இருமுதல், உமிழ்தல், துரும்பு கிள்ளல், கொட்டாவிவிடுதல், உடம்புமுறித்தல், நெட்டிமுறித்தல்.

★ அமுதமெனினும் அளவறிந்துண்ணுக ★

## மகாஜனுவில் மரம்நாட்டும் சாதனை

மகாஜனக்கல்லூரி மாணவர் மாணவியர் மற்ரெரு மகத்தான சாதனையையும் சாதித்துள்ளார்கள். சென்ற 29-11-76 திங்கட்கிழமை கல்லூரி ஆலய பூசை வழிபாடு நிறைவேறியதும், குருக்கள் ஐயா மரங் கன்றுகளுக்கும் வேறு பயன்தரு மரங்களுக்கும் நிழல்தரு மரங்களுக்கும் தூப தீபங்காட்டி மரம்நாட்டும் பணியைப் புனிதமாக்கி விட்டார். அன்று மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்கள், செய்தி ஆசிரியர் குலரத்தினம் அவர்கள், தொழில் முன்னிலைப் பாடப் போதனுசிரியர் பரநிருப சிங்கம் அவர்கள் மரம் நாட்டும் பணியைப் பற்றிப் பன் முகமாகப் பிள்ளைகளுக்குப் பயன்தரும் வகையிற் பேசி ஞர்கள். மில்க்வைற் தொழிலதிபர் கல்லூரி மைதான ஓரங்கள், வளவு எல்லைகளில் மரங்களை நிரையாக நாட் டியபின் பத்தாம் வகுப்பு செய்திட்ட மாணவர்கள் அரிதில் திரட்டிய இருபதாயிரம் பனம் விதைகளை மில்க்வைற் முதல்வரிடம் அருங்கொடையாகக் கொடுத்தார்கள். கால மறிந்து இவர்கள் கொடுத்த கொடை வவுனியா, மன்னர், வவுனிக்குளம், அடம்பன் மாவட்ட அரசாங்க அதிபர் களின் அவசர வேண்டுகோளுக்கு ஆபத்தில் உதவிய அரு மருந்தாக அமைகிறது. வாழ்க மகாஜன, வளர்க மாண வர் தொண்டு. ★

## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்திக்கு ஓராண்டு நிறைந்து இன்று இரண்டாம் ஆண்டில் எடுத்தடி வைக்கிறது. சென்ற ஆண்டில் ஏதோ எமக்குத் தெரிந்தவற்றை எம்மால் இயன்றவரை நாட்டுக்கும் மொழிக்கும் நம் சமயத் துக்கும் நம்பி நங்கையர்களுக்கும் நன்மையுண்டாக வேண்டும் என்னும் ஆசையால் வெளியிட்டோம். எங் கள் செய்தியைப் பாராட்டி எம் நாட்டின் பல பாகங் களிலிருந்தும், பாரத நாட்டிலிருந்தும், மலேசியா, தென்னுபிரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந் தும் அன்பர்கள் எழுதியிருந்தார்கள். அவர்கள் எல் லோருக்கும் எம் நன்றி.

எங்கள் செய்தி வேதம், ஆகமம், புராணம், இதி காசம், திருமுறை, சாத்திரம், இலக்கியம், கலை, விவ சாயம், மருத்துவம் முதலியவற்றைப்பற்றி உங்களுக்குச் சொல்லும். பனைவளம் பெருக்குதல், மரம்நாட்டுதல், குளந்தோண்டுதல், மழைநீரைத் தேக்குதல் பற்றி அதிக மாகக்கூறிய செய்தி இனிமேல் யோகம், சித்த வைத் தியம், மூலிகைகள், தாவரவுணவு, இலங்கைப் பெரி யார்களின் அடிச்சுவட்டு வரலாறு ஆகியவற்றையும் கூறும். மில்க்வைற் சோப்பின் ஏதாவது இரண்டு உறை களை அனுப்பி இதனைத் தபாற்செலவின்றிப் பெற்றுப் படியுங்கள்.

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்க்கிற தால், நம்முடைய துன்பங்களை சகிக்கக் கற்றுக் கொள்கிறேம். —— மார்க் ட்வயின்



## விவேக பிரஸ்னேத்தரி

★

— சுவாமி சிவாநந்தர் —

1. அதிக தொல்லை கொடுக்கும் உறுப்பு எது?
   நாக்கு
2. பயங்கரமான பகைவன் யாவன்?
   மனது
3. உலகில் சிறந்த நண்பர் யாவர்?
   ஞானியர் நல்லவர் சத்சங்கம்
4. உண்மையான தந்தையர் யாவர்?
   குரு
5. உலகிற் சிறந்த பாஷை எது?
   இருதய பாஷை
6. சிறந்த நல்லொழுக்கம் எது?
   பிரம்மசர்யம்
7. அதிக போதை ஊட்டுவது எது?
   காமம்
8. உண்மையான உயர்ந்த அரசன் யாவன்?
   சீவன்முத்தன் ஞானி
9. சிறந்த தர்மம் எனப்படுவது எது?
   சுயநலமற்ற சேவை
10. மிகத் தீயகுணம் எது?
    கோபம்

உயிர்ச்சத்துள்ள கீரைகள்:

## வல்லாரை

உயிர்ச்சத்துள்ள கீரைகளுள் உடல் வளர்க்கும் மூலிகைகளுள் வல்லாரையும் ஒன்று. இதனை கவனமூலிகை என்றும் உடலந்தேற்றி என்றும் கூறுவர். காயசித்தி மூலிகைகளுள் இது சிறந்தது என்று சித்தர்கள் கூறி யுள்ளனர்.

வல்லாரை மூளையைப் பலப்படுத்தும். ஞாபகசக்தி யைப் பெருக்கும். பைத்தியத்தன்மையைப் போக்கும். கர்ப்பந்தரித்தவர் இதனை உண்டுவந்தால், பிறக்கும் பிள்ளை கள் ஞாபகசக்தியுள்ளவராய் இருப்பர். இதனல் வாக்குச் சுத்தம் உண்டாவதால் இதனைச் சரஸ்வதிச் செடி என்றும் கூறுவர். வாக்குக்குரிய வல்லாரை பாக்களவு தின்ருல் ஆக்கைக்கு உயிராம் என்று பெரியோர் கூறுவதால் இதன் சிறப்பு அதிகமாகும்,

வல்லாரை இருதயத்தையும் பலப்படுத்தும். நரை வருவதைத் தடுக்கும். சித்தப்பிரமையைப் போக்கும். இன் னும் குஷ்டம் கசம் என்பன குணமாகும். ★

# பொங்குக பொங்கல்

அன்பு தழைத்திடப் பொங்குக பொங்கல்
ஆர்வம் சிறந்திடப் பொங்குக பொங்கல்
இன்பம் பரவிடப் பொங்குக பொங்கல்
ஈகை வளர்ந்திடப் பொங்குக பொங்கல்
உழவர் ஓங்கிடப் பொங்குக பொங்கல்
ஊக்கம் பெருகிடப் பொங்குக பொங்கல்
எண்ணம் உயர்ந்திடப் பொங்குக பொங்கல்
ஏர்வளம் சிறந்திடப் பொங்குக பொங்கல்
ஐயர்தம் அறவழி பொங்குக பொங்கல்
ஒற்றுமை வளர்ந்திடப் பொங்குக பொங்கல்
ஓங்குக நாடெனப் பொங்குக பொங்கல்
ஔவைமார் வாழ்ந்திடப் பொங்குக பொங்கல்
அஃகேன அடுப்பில் பொங்குக பொங்கல்
கரும்பென நெல்லும் பொங்குக பொங்கல்
காசினி யெங்கும் பொங்குக பொங்கல்.

## அவரவர் வேலையில் அவரவர் அமைவதே நல்லது

ஒருசமயம் மலருக்கு ஒரு விபரீத புத்தி உண்டானது. அது இயற்கையிடம் சென்று "தேவி என்றும் கல்லைப் பூசிப்பதற்கு என்னையா உபயோகித்தல் வேண்டும். ஏன் என்னை ஒருவரும் பூசிக்கக்கூடாதா?" தேவி சொன்னாள் "பூவே உலகில் பூசனை பொலிதல் வேண்டும். பூசனையைத் தவிர்த்தல் ஆகாது. எனவே இனிமேல் கல் உன்னைப் பூசிக்கட்டும்" என்றாள். அடுத்தநாள் தேவி சொற்படி மலரைப் பூசிக்கக் கல்வந்தது. மலருக்கு மூச்சுத்திணற ஆரம்பித்தது. இதழ்கள் தவிடுபொடியாகின. மலர் இயற்கையிடம் ஓடியது. "தேவி! பூசையை ஏற்றுக்கொள் வதைக் காட்டிலும் பூசிப்பதுதான் நன்மைதரக்கூடியது. தயைகூர்ந்து முந்திய முறையே நல்லது, மாற்றிவிடுங்கள்.

— காண்டேகர்

## சேவைநலம் பாராட்டிப் பொற்கிழி

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியை சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆசிரியத் தொழிலில் ஓய்வுபெறும்போது கல்லூரி உயர்வகுப்பு மாண வர்கள் மாணவியர் பிரிவுபசாரக் கூட்டங்கள் நடத்தி னார்கள். கல்லூரியில் 9-12-76 வியாழக்கிழமை நடை பெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மில்க்வைற் தம்பதிகள் திரு. கனகராசா, திருவாட்டி நாகம்மா கனகராசா அவர்கள் பண்டிதைக்குப் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்கள். ★

## இசைபாடுவோர் தலைவன் இலக்கணம்

மிடற்றினும் யாழ் முதலியவற்றின் நரம்புகளினும் தோன்றும் ஏழு சுரங்களையும் இடவேறுபாடறிந்து வெளிப் படுத்தல், சேர்க்கப்படுவனவும் பிரிக்கப்படுவனவுமாகிய சுரங்களை நன்றாக அறிதல், பண்ணமைய இன்னிசை பொருந்தத் தாளத்துடனுதல் அன்றி அவற்றோடு ஆட லோடாதல் பாடுதலாகிய இவைகள் வாய்க்கப்பெற்றோன்.

## பொன் விளையும் மண்

எங்கள் மண் பொன் விளையும் மண். எமக்குத் தேவை யான வெண்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, உழுந்து, பயறு இன்னும் எத்தனை உணவுப் பயிர்களோ அத்தனையும் உண்டாக்கித் தரும் எங்கள் மண்ணைப் பொன் விளையும் மண் என்று போற்றாமல் என் சொல்வது.

பொன் விளையும் மண் இருப்பதோடு எங்கள் நாட் டில் இணையற்ற இயற்கைவளனும், எல்லாம் அறிந்த உழவர்களின் அறிவுத்திறனும் உண்டு. படித்த வாலிபர் பலர் அன்னை பூமியின் அழைப்பை ஏற்றுத் தம் கைவரிசை யைக் காண்பித்து வருகிறார்கள். மில்க்வைற் தொழிலதிபர் தமது மாதாந்தச் சுற்றுலாவின்போது குடியேற்றங்களை வரிசையாகப் பார்ப்பது வழக்கம். எங்கே போனாலும் இளைஞர் இன்முகத்துடன் வாழைக்குலை, கரும்பு, மாதுளம்பழம் இன்னும் என்னென்ன விளைவுகள் கிடைக் கின்றனவோ அவற்றைக் கைநிறையக் கொடுத்து வழி விடுகின்றனர். எத்தனையோ இளைஞர்கள் தங்கள் விவசாய வாழ்வின் முன்னேற்றத்துக்கு மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா சொல்லி வருகின்ற உற்சாக வார்த்தைகளும் உபகரிப்புகளும் ஆதரவாக இருப்பன என்று நன்றிக்குரல் எழுப்புகிறார்கள். ★

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. அன்பும் புனிதமும் பணிவும் ஆத்மசாதன வழி.
2. ஈஸ்வர நாம ஜபத்தால் உள்ளம் தூய்மையடை கிறது.
3. மனம் ஒடுங்கும்தோறும் அருட்பேறு கிடைக்கிறது.
4. மெய்ம்மையைக் கடைப்பிடிக்கப் பொய்மை தானே விலகும்.
5. பனையளவு பேச்சைவிடத் தினையளவு செயல் சிறந்தது.
6. மனத்தை உறுதிப்படுத்தத் தியானம் அவசியம்.
7. உழைக்காமல் எவரும் உயர்நிலையடைய முடியாது.
8. பொதுநலனில் ஈடுபடுபவன் பெருமகனாகிறான்.
9. அவமானப்பட நேரும்போது அமைதியாய் இரு.
10. அருளுக்குப் பாத்திரமானவன் அதனை விளம்பரப் படுத்துவதில்லை.

★ குடிநீர்க் குளத்தில் குளிக்க விரும்பேல் ★




1. இறைவனை மனனஞ் செய்பவர் யாவர்?
முனிவர்கள்
2. தர்மஞ் செய்ய உறுதி தருவது எது?
தவம்
3. எல்லோருக்கும் இயன்ற தர்மம் எது?
மனத்தை அடக்குதல்
4. சுகத்தையும் துக்கத்தையும் சம்மாகக் கருதச்செய்வது எது?
பொறுமை
5. வெட்கம் என்றால் என்ன?
தீச்செயல்கள் செய்ய அருவருத்தல்
6. ஞானம் என்றால் என்ன?
தன்னை அறிதல்
7. வெல்ல முடியாதது எது?
கோபம்
8. ஒழியாமல் இருக்கும் பிணி எது?
பேராசை
9. தைரியமாவது யாது?
புலன்களை அடக்குதல்
10. பண்டிதன் எனத் தகுந்தவன் யாவன்?
தர்மத்தை அறிந்தவன்

## பெருங்கதை

சென்ற மாதம் நடைபெற்ற விநாயக விரத காலத்தில் பெருங்கதை என்னும் விநாயக புராணம் படிப்பது வழக்கம். இம்முறை இளைஞர் பலர் இவ்விரத நாள்களில் புராணம் படித்து வழிபட்டமை வெகு உருக்கமாக இருந்தது. வண்ணார்பண்ணை நாவலர் சந்தியில் உள்ள சாந்தையார் விநாயகர் ஆலயத்திலும், திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் உள்ள விநாயகர் ஆலயத்திலும் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் பங்குபற்றினர். திருநெல்வேலி விநாயகர் ஆலயத்துத் திருமுறை மன்றத்தார் செய்துவருகின்ற மகேஸ்வர பூசைக்கு ஆண்டுதோறும் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களின் ஆதரவு உண்டு. ★

## நாட்டுப்பாடல்

உழவர்கள் தங்கள் வயல்களில் உழுதல், விதைத்தல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், காவல்காத்தல், கதிரறுத்தல், தூற்றுதல், விளைவை வீட்டுக்குக் கொண்டுபோதல், குற்றுதல் முதலிய பல தொழில்களில் களைப்பும் வாட்டமும் போக்கி மகிழ்ச்சியும் உணர்ச்சியும் உண்டாக்குவதற்கு நல்ல நல்ல பாடல்களை நாடோடியாகப் படிப்பர். இனிமையான பாடல்களைப் பாடுவோரும் உழைப்பாளிகளுக்கு உற்சாகமூட்டுவோரும் இக்காலத்தில் அருகி வருகின்றனர். இளம் விவசாயிகள் அதிலும் பெண்கள் இத்தகைய பாடல்களைத் தேடிப் பாடமாக்கிப் பாடி வேலைகளை எளிதிற் செய்யப்பயிலுதல் நல்லதாகும்.

# அண்ணன் உழுத வயல்

குத்தடி தோழிகளே
கூலிக்கு நடுங்கோடி
கூலிக்கு நடுங்கோடி — இந்த
குண்டு சம்பா நாத்தெடுத்துக்
குனிந்து நடுங்கோடி.

ஆடுங்கோ பாடுங்கோ
அடுக்கி நடுங்கோடி
அடுக்கி நடுங்கோடி — இந்த
அழகு சம்பா நாத்தெடுத்து
அழுந்த நடுங்கோடி.

செவலைக்காளை பூட்டி
சேடை உழுதானும் — அண்ணன்
சேடை உழுதானும்
சின்னச் சம்பா நாத்தெடுத்துச்
சேர நடுங்கோடி.

மயிலை எருது பூட்டி
வயலை உழுதானும் — அண்ணன்
வயலை உழுதானும்
வாழைச் சம்பா நாத்தெடுத்து
வகையா நடுங்கோடி.

காரி எருது பூட்டி
கழனி உழுதானும் — அண்ணன்
கழனி உழுதானும்
கருங்குறுவை நாத்தெடுத்துக்
கலந்து நடுங்கோடி.

குங்குமப் பிரம்பெடுத்துக்
கூடை அள்ளுங்கோ
கூடை அள்ளுங்கோ — இந்தக்
கூடையிலே நெல்லை அள்ளி
வீடு திரும்புங்கோ.

★ போசன முடிவிலே நீரினை அருந்து ★

## மாதர் பகுதி

### அன்னை அன்பு

— ஆதாரம்: மஞ்சரி

அன்னை அன்பு இல்லையென்றால் அமைதி எங்கும் இல்லை
ஆசை காட்டி ஆசிகூற அன்னை அன்பு தேவை
இன்பமூட்டித் துன்பம் போக்க அன்னை அன்பு தேவை
ஈகை செய்து சோகம் தீர்க்க அன்னை அன்பு தேவை
உள்ளமகிழ உவகையூட்ட அன்னை அன்பு தேவை
ஊக்கமூட்டி வெற்றியருள அன்னை அன்பு தேவை
எல்லையில்லாப் புகழ் சிறக்க அன்னை அன்பு தேவை
ஏக்கம் வந்தால் போக்குவிக்க அன்னை அன்பு தேவை
ஐக்கியத்தை வளர்த்துயர்த்த அன்னை அன்பு தேவை
ஒற்றுமையை ஓம்புகின்ற அன்னை அன்பு தேவை
ஓங்குபுகழ் உலகில் யார்க்கும் அன்னை அன்பு தேவை
ஔடதமே போன்று நமக்கு அன்னை அன்பு தேவை.

## பொங்கல் திருநாள்

பொங்கற் புதுநாள் வளங்கொழிக்கும் திருநாள். மக்கள் உள்ளத்தில் உவகைபொங்கும் பெருநாள். ஒவ்வொரு வீட்டிலும் பால் பொங்குகிறது. பால்போல் உள்ளமும் உவகை பொங்குகிறது. வளமெல்லாம் வீடுவந்து சேர்ந்தமையால் வீடு பொங்குகிறது. வளமெல்லாம் விளைவதற்கு சீதோஷ்ண நிலையைத் தக்கவாறு தந்த சூரியனுக்கு முதலில் பொங்கல். அடுத்து செல்வம் என்றால் மாடு. மாடு பசுவாயும் காளையாயும் வளத்தைத் தருவது. உழைத்த மாடுகளுக்கு அடுத்தநாளில் மாட்டுப் பொங்கல். இது தமிழர் பண்பாடு. இத்தகைய பண்பாடு உலகில் எங்கும் கிடையாது. நந்தமிழ் நாடு நன்றியறிதலுடைய நாடு. நன்றி நவிலும் நாளே பொங்கல் நாள். அறிவு வளர அன்பு வளரும். அன்பு வளர அருள் வளரும். அருள் மலர நாட்டில் சுபீட்சம் நிலைக்கும்.

### தைமாதப் பிறப்பு

நாம் வாழும் பூமி சூரியனைச் சுற்றி வருவதற்கு ஒரு வருடமாகிறது. இக் கால எல்லையைப் பன்னிரண்டு மாதங்களாக வகுத்துள்ளனர். இம்மாதங்களை இராசிக் கணக்கிலும் வகுப்பர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்திரை | — | மேடம் | ஐப்பசி | — | துலாம் |
| வைகாசி | — | இடபம் | கார்த்திகை | — | விருச்சிகம் |
| ஆனி | — | மிதுனம் | மார்கழி | — | தனு |
| ஆடி | — | கடகம் | தை | — | மகரம் |
| ஆவணி | — | சிங்கம் | மாசி | — | கும்பம் |
| புரட்டாதி | — | கன்னி | பங்குனி | — | மீனம் |

இவ்வாறு பூமி சுழன்றுவருகின்ற அமைப்பைச் சூரிய சஞ்சாரம் எனக் கணித்து உத்தராயனம் தெட்சணாயனம் என இரண்டாகக் கூறுவர். உத்தராயனமாவது சூரியன் வடக்கு நோக்கிச் செல்லுதல் என்றும் தெட்சணாயனம் என்றால் அது தெற்கு நோக்கிச் செல்லுதல் என்றும் பொருள்படும். தை மாதம் முதல் ஆனி மாதம் வரையும் உள்ள காலம் வடக்கு நோக்கியும், ஆடி முதல் மார்கழி இறுதியாகவுள்ள காலம் தெற்கு நோக்கியும் சஞ்சரிக்கும் என்பர்.

இவற்றுள் உத்தராயனகாலம் தேவர்களுக்குப் பகற் பொழுதாகவும் தெட்சணாயனம் இராப் பொழுதாகவும் கருதப்படும். இவ்வாறாக மார்கழி என்னும் தனுர்மாத காலம் தேவர்களுக்கு விடியற்காலமாகும். எனவேதான் இம்மாதத்தில் உஷத்கால பூசைகளும் திருவெம்பாவை, திருப்பாவை விழாக்களும் நிகழுகின்றன.

அடுத்துவரும் தை மாதத்தின் முதலில், சூரியன் தனு ராசியிலிருந்து மகரராசியிற் பிரவேசிக்கும் வேளை மகர சங்கிராந்தி எனப்படும். இதுவே தை மாதப் பிறப்பு தைப்பொங்கல் தினமாகும். இது உள்ளம் பொங்குகின்ற மகிழ்ச்சித் திருநாளாயும், இந்துசமயச் சடங்காயும் உள்ளது. எனினும் பொதுவாகத் தமிழ்த் திருநாள் எனவே இது உலகமெங்கும் தமிழர் வாழுமிடமெங்கும் கொண்டாடப்படுகிறது. ★

## தையே வருக! தையாள் வருக!!

உற்பத்தி பெருகி நாடும் மக்களும் வளம்பெற்று வாழ வழிவகுக்கும் தையே வருக! தையாள் வருக. தை பிறந்தால் வழி பிறக்கும் என்று எம்மவர் உன்னை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். உன் வரவு நல்வரவாகுக.

ஸ்ரீதேவி! அடியேம் அபிலாஷையால் எம் மனத்தில் எழுகின்ற நல்ல விருப்பங்களையும், பொங்கும் மகிழ்ச்சியையும், வாக்கின் சத்தியத்தையும், இன்னும் பசுவளம், அன்ன சுபீட்சம் என்னும் இவற்றின் இன்பங்களையும் யாம் அனுபவிக்கத் திருவருள் புரிவாய். எம்மிடம் நற்கீர்த்தி சேர அருள்செய்வாய்.

மங்கலப் பொங்கல் திருநாளில் சீரும் செல்வமும் சிறப்பும் பெற்று நாடு செழிக்கப் பிரார்த்திக்கின்றோம். சென்ற காலத்துப் பழுதிலாச்சேவை எதிர்காலத்துக்குப் பயன்தரும் என்று எண்ணுகிறோம். எங்கள் அபிலாசை நாடு வாழவேண்டும் என்பதே. எங்கள் ஆசை நிறைவேறச் சங்கங்கள் பல ஆதரவு தந்தன. பாடசாலைகள் கல்லூரிகள் பல்லாயிரம் பனம் விதைகள் தந்தன. காடு மேடெல்லாம் பனம் விதைகள் முளை கொள்ளுகின்றன. நாடு வளம்பெறக் குளங்கள் பலவற்றை நல்லமுறையில் ஆழமாக்க ஆதரவளித்தோம். ஆயுதமுதவினோம். பல்லாயிரக்கணக்கான பயன்தரு மரங்களை நாட்டுவதற்குப் பள்ளிப் பிள்ளைகள் உதவி செய்தார்கள். நீரைத்தேக்கி நிலத்தை வளஞ்செய்ய எத்தனையோ பேர் நிகரற்ற சேவை செய்தார்கள். திருக்கேதீஸ்வரத்தில் அறுபத்து மூவர் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்வதற்கு யாழ்ப்பாணத்து பெரிய கல்லூரிகளின் மாணவ மாணவிகள் ஆயிரம் இருத்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

★ மென்று தின்றால் வெகுகாலம் வாழலாம் ★




காந்தியடிகள் தென்னாபிரிக்காவைவிட்டுத் தாய் நாட்டுக்கு மீள நினைத்தார். ஆனால் அங்கிருந்த இந்தியர்கள் அவரைத் தடுத்துத் தங்களுக்காக அவரை அங்கே தங்குமாறு இரந்து வேண்டினார்கள். அடிகள் அவர்கள் மேல் இரங்கி அவர்களுக்குச் சேவை செய்வதற்கு அங்கே தங்குவதற்கு இசைந்தார். அவர் அங்கே தொழில் நடத்துவதற்காக அந்நாட்டு உயர் நீதிமன்றத்தில் நியாயவாதியாகப் பதிவுசெய்யக் கோரினார். வெள்ளையர்கள் அவரைக் கூலி என்றும் கறுப்பர் என்றும் கூறித் தடை செய்தார்கள். ஆனால் நீதியரசர் அவரை நீதிமன்றத்தில் தொழில் நடத்த அநுமதி வழங்கினார்.

இந்தியரின் நன்மைக்காகத் தாம் பணி செய்வதற்கு உறுதுணையாக அவர் நத்தாலில் 22-5-1894 இல் இந்திய காங்கிரஸ் என்றொரு தாபனத்தை உருவாக்கினார். அவர் அங்கே நியாயவாதியாக இருந்த காலத்தில் ஒருநாள் பாலசுந்தரம் என்னும் தமிழ் இளைஞன் ஒருவன் பல் உடையப்பட்டு வாயிலிருந்து இரத்தம் வடியக் கிழிந்த உடையுடன் வந்தான். தன் ஐரோப்பிய எசமானன் தன்னை இவ்வாறு செய்தார் என அவன் முறையிட்டான். காந்தியடிகள் அவனுக்காக வழக்காடினார். ஐரோப்பியரான எசமானன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையை ஏற்றுக்கொண்டார். காந்தியடிகள் சிறந்த நியாயவாதி எனப் புகழ்பெற்றார். தொழிலாளர் அவரைத் தஞ்சம் புகுந்தனர். ★

## மார்கழித் திருவாதிரை

திருவாதிரை என்பது சிவபெருமானுக்குரிய நட்சத்திரமாகும். திருவாதிரை என்னும் நட்சத்திரம் சூரியனைவிடப் பல்லாயிரம் மடங்கு பெரியது. அது விண்ணில் மிகவுயரத்தில் நின்று மிக்கவொளியைத் தருவது. அதன் தாக்கம் விண்ணிலேயன்றி மண்ணிலும் அதிகமாகவுள்ளது. திருவென்னும் அடைபெற்ற நட்சத்திரங்கள் இரண்டில் திருவாதிரையும் ஒன்று. திருவாதிரை சிவபெருமானைப் போன்றது. அதனால் சிவனை ஆதிரையன் என்று சங்ககாலப் புலவர்கள் வழங்கி வழிபட்டு வந்தார்கள்.

மிகச்சிறந்த திருவாதிரை பூரணையோடு கூடி வரும் மாதம் மார்கழி. எனவே திருமால் மாதங்களில் நானே மார்கழி என்றார். அதிலொரு தத்துவமும் உள்ளது. அதனாலேயே வைஷ்ணவர்கள் மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாள் எனக் கொண்டாடுவாராயினர். மார்கழித் திருவாதிரையின் வைகறைப் பொழுது சிவபெருமானின் பஞ்சகிருத்தியங்களில் அருளல் நடைபெறும் காலமாகும். அதன்பின் தைமாத முதலாக வருகின்ற காலங்களில் படைப்பாதி கிருத்தியங்கள் நடைபெறும் என்பதைக் குறிக்கும் விழாக்கள் இடம்பெறுகின்றன. மார்கழித் திருவாதிரை விழா உற்சவமும் திருவெம்பாவைப் பாராயணமும் பயன்தரும் நிகழ்ச்சிகளாகும். ★

## பிரிவுத்துயரம் பெரிது

### உடையார் ஐயாவின் தர்ம பத்தினி

பொன்னாவெளி முன்னாள் உடையார் அருளம்பலம் அவர்களின் தர்மபத்தினி நாகரத்தினவல்லி அவர்கள் 6-12-76 சோமவாரத்தில் திருக்கேதீஸ்வரத்து வடக்கு வீதியில் தம் ஆச்சிரமத்தில் அமரராயினர். வயது முதிர்ந்த தம்பதிகளாய் இருவரும் அடியார் பத்தியிற் சிறந்து கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரநாதன் திருவருளை நம்பி வாழ்ந்தவர்கள். உடையார் ஐயாவின் விருந்தோம்பும் பண்புக்குக் கைகொடுத்து இளையான் குடிமாறநாயனாரின் தேவியார் போல அம்மையார் வாழ்ந்தவர். முதுமைக் காலத்துத் தளர்ச்சியையும் நோக்காது திருக்கேதீஸ்வரம் சேரும் அடியார்களுக்கு அன்னம்பாலித்தும் ஆவன செய்தும் வந்த அம்மையார் பிரிவால் உடையாரவர்களுக்கு ஆறாத்துயரம் உண்டு. தாம் தனித்துவிட்டதாகத் தவிக்கும் இப் பெரியாருக்குத் தலைமுறை தலைமுறையான தமிழ்ப்பண்பு உண்டு.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தொண்டுகளுக்கு அவர் உடலுறுதி பெரிதெனக் கருதிய மூன்றாந் தலைமுறை உடையார் நெல்லும் நெய்யும் கொடுத்துக் குண்டையூர்க்கிழார் போல வாழ்ந்த பெரியார். அப் பெரியாரின் வழித்தோன்றலான எங்கள் அன்புக்குரிய அருளம்பல உடையாரவர்களும் விருந்தோம்பும் பண்பின் நரைகண்டு வாழ்ந்தவர். அவர் விருந்து வரும்போது வெதும்பும் நிலை உண்டாகிவிட்டதே என்று நாம் கவலைப்படுகிறோம்.

உடையாரின் உத்தம பத்தினியார் நாகரத்தினவல்லியாரின் அந்தியேட்டி வருகிற 5-1-77 புதன்கிழமை திருவாதிரை நாளில் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறும். அம்மையார் தாம் நம்பியிருந்தவண்ணம் கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரநாதப் பெருமானின் திருவடி நிழலில் நித்தியானந்தப் பெருவாழ்வில் திளைக்குமாறு இறைவனைப் பணிந்து வேண்டுகிறோம். ★

## 1977ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விசேஷ தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| தை | 1 | சனி | கார்த்திகை, சுவர்க்கவாயில் ஏகாதசி |
| ,, | 2 | ஞாயிறு | பிரதோசம் |
| ,, | 5 | புதன் | நடேசர் ஆருத்திரா தரிசனம் |
| ,, | 11 | செவ். | இயற்பகைநாயனார் குருபூசை |
| ,, | 14 | வெள்ளி | தைப்பொங்கல் |
| ,, | 15 | சனி | மா. பொங்கல், ஸ்மார்த்த ஏகாதசி |
| ,, | 16 | ஞாயிறு | வைஷ்ணவ ஏகாதசி |
| ,, | 17 | திங்கள் | பிரதோசம் |
| ,, | 19 | புதன் | அமாவாசை |
| ,, | 28 | வெள்ளி | கார்த்திகை |
| ,, | 30 | ஞாயிறு | ஏகாதசி |
| ,, | 31 | திங்கள் | கண்ணப்பநாயனார் குருபூசை |

★ தினம் இருவேளை மனமுவந்துண்ணுக ★

# உழவரும் உரமும்

உழவுத்தொழில் தொடங்கிய காலந் தொட்டு உழவர் நிலத்தை வளம் செய்வதற் காக உரமிட்டு வருகிறார்கள். உரத்தை எரு என்றும் பசளை என்றும் பலவாறாகக் கூறுவர். பயிர் விளைவால் பூமியில் ஊட்டங்குறையும் போது அதற்கு ஈடுசெய்வதற்காகவே எரு இடுகிறார்கள்.

உரமேற்றி உழவுசெய் என்றும், எருச்செய்கிறது இனத்தான் செய்யமாட்டான் என்றும், உரம் செய்கிறது உறவுடையான் செய்யமாட்டான் என்றும், கொடுக்கும் எருவால் எடுக்கும் மர்சூல் என்றும் பழமொழிகள் வழங்கு கின்றன.

## நால்வகை எரு

பொதுவாக நல்ல உரங்களை நால்வகையாக வகுத் துள்ளனர். அவை குளத்து எரு, குண்டை எரு, தாவர எரு, தாது எரு என்பனவாம்.

### 1. குளத்து எரு

மழைத்தண்ணீர் பள்ளம் நோக்கிப் பாய்ந்து வரும் போது வண்டல்களையும் இலைகள், சருகுகள், குப்பைகளை யும், உக்கிய மட்கையும் வாரியடித்துக்கொண்டு குளத்தை யேனும் ஆற்றையேனும் சேரும். அங்ஙனம் சேரும் வண் டல்களை வெட்டி எடுத்துவந்து வயலில் இடுதல் வழக்கம். ஆற்று மண்மேல் வேற்று மண் உரம் என்பது உழவரின் அநுபவ மொழியாகும்.

### 2. குண்டை எரு

குண்டை என்பது எருது. ஆடு, மாடு, பன்றி இவை களின் மலமும் சலமும் மதிப்பான எருவாகும். மாட்டு மூத்திரத்தில் அம்மோனியா உப்புகள் உண்டு. தொழுவின் நீரே பழுதிலா எருவாம் என்றும், கூளம் பரப்பிக் கோ மயம் சேர் என்றும் கமக்காரர் கூறுவர். ஆட்டு எரு மிகவும் காரமானது. ஆட்டெரு அந்தப் போகம் என்பது பழமொழி. ஆட்டெருவைத் தண்ணீரிற் கரைத்துத் தெளித் தல் நல்லது என்பர்.

ஆட்டுரம் ஓராண்டு நிற்கும். மாட்டுரம் ஆறாண்டு நிற்கும். ஆதலால் ஆட்டுரம் தன்னில் மாட்டுரம் மேல் என்பர்.

### 3. தாவர எரு

பச்சை எரு, பசுந்தாள் உரம், தழை எரு எனப் பல வாறாக வழங்கும் தாவர எரு எல்லா எருக்களிலும் உயர்ந் தது. பச்சை இலைகள் மட்கி மண்ணுடன் கலந்து மகத் தான உரமாகிறது. உதிர்ந்த இலைகள் உயர்ந்த உரம் என்பது அநுபவ மொழியாகும். பச்சை இலைகளில் நைதர ஷன் என்னும் மூலப்பொருள் நிறையத் தங்கியுள்ளது. பசுந்தாள் உரமே பக்குவ உரமாம் என்றும் தக்கைப் பூடு தகைமைசால் உரமாம் என்றும், ஆடு பயிரிடும் ஆவாரை நெல்லிடும் என்றும் அநுபவசாலிகள் கூறுவர்.

தாவர எரு என்னும்போது அதற்கு நீண்டதொரு பட்டியலை நினைவிற்கொள்ளுதல் வேண்டும். கொழுஞ்சி, கொள், அவுரி, ஆவாரை, எருக்கு, காட்டாமணக்கு, சணல், தக்கைப் பூடு, பூவரசு, என்பன தலைசிறந்தவை என்பதை மறந்துவிடலாகாது. பூவரசு எங்கும் நன்றாக உண்டாகிப் பயன்தருவது. வெற்றிடங்களிலும் வீதி யோரங்களிலும் அதை நாம் விரும்பி நட்டுப் பயன் பெற லாம். மில்க்வைற் தொழிலதிபர் பெருந் தொகையான சணல் விதைகளை உருத்திரபுரத்துக் குருகுலப் பெரியார் கதிரவேலு அவர்களிடம் பெற்று, நாடெங்கும் இலவச மாகக் கொடுத்து நல்லமுறையில் பசளை வளத்தை உண் டாக்கியுள்ளார். தழை எரு நன்செய்க்கு நலம் என்பது உழவரின் அநுபவமாகும்.

### 4. தாது எரு

அவசரம் அவசரமாக விளைவைப் பெருக்க விரும்பு வோர் அம்மோனியம் சல்பேட், நைற்றேட், பொஸ்பேற், கல்சியம், சுப்ப பொஸ்பேற் முதலிய உப்புக்களை உரமாக உபயோகிக்கின்றனர். இவையாவும் செயற்கை எருக்கள். தாது எரு எனப்படுவன இவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகி இப்போ உள்நாட்டு உற்பத்திசாலைகளில் செய்யவும் படுகின்றன. குறுகிய காலத்தில் பயன்பெற விரும்புகிறவர் இவற்றை உபயோகித்துப் பயனடை கின்றனர்.

தாது எருவில் பிராணிகளின் எலும்புகள், மீன் செதில் கள், ஆடு மாடுகளின் இரத்தம், எலும்புச் சாம்பல் முதலி யனவும் சேர்கின்றன.

அநுபவம் வாய்ந்த மில்க்வைற் தாபனம் அண்மையில் நீமியா என்னும் உரத்தை விஞ்ஞான முறையில் தயாரித் துள்ளது. இதில் உள்ள விசேட தன்மைகள் இரண் டாகும். இது முதலில் நிலத்திலுள்ள பூச்சிகள், கறை யான்களைக் கொல்லும் சக்திவாய்ந்தது. அடுத்து நிலத் துக்கு வேண்டிய உரத்தைக் கொடுத்து விளைவைப் பெருக்க வைப்பது.

★ நீமியா சிறிய பைகளில் கிடைக்கும் ★

## பொங்கல் வாழ்த்து

திருநெறிச் சைவம் வாழத்
தெய்வமாத் தமிழ் விளங்கப்
பெருநெறி யாகும் சைவம்
பேணிடும் அடியர் வாழ
அருநெறி பிடித்து ஞாலம்
அருந்துயர் நீங்கி யோங்க
ஒருநெறிப் பொங்கல் பொங்கி
உலவுக உலக மெல்லாம்.

— குருசாமி தேசிகர்

★ உண்டதும் நூறடி உலாவி உறங்கு ★

## களைப்பு நீங்க வழி

சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார்

''மதுபானத்தினுல் களைப்பு நீங்குமென்பது முற்றும் தவருன எண்ணம். மது களைப்பைப் போக்குவதில்லை; கொஞ்சநேரம் களைப்புத் தோன்ருமல் செய்கிறது. வலியின் காரணத்தை நீக்குவதில்லை; சிறிது நேரத்துக்கு வலி தெரியாமல் செய்கிறது'' என்கிருர், டாக்டர் கோர்ட்னி வீக்ஸ் என்னும் பிரபல வைத்தியர்.

இப்படி அறிவை மயக்கிக்கொண்டு களைப்புத் தோன்ருமல் செய்துகொள்வது நல்லதா என்று யோசிக்கவேண்டும். களைப்பு என்பது என்ன? உடம்பு அதிகமாக உழைத்தால் அதன் பயனுக இரத்தத்தில் விஷ அணுக்கள் சேர்கின்றன. இந்த விஷ அணுக்களை வெளியே தள்ள இரத்தம் முயற்சி செய்யும்போதுதான் உடம்பில் களைப்பும் வலியும் தோன்றுகின்றன. இவை தெரியாமலிருப்பதற்காகத் தடை செய்வதேயாகும்.

இதுமட்டுமன்று. ஆரம்பத்தில் கொஞ்சமாகக் குடித்தாலும் உணர்ச்சி மழுங்கி வலி தோன்ருமல் இருக்கும். நாளாக ஆக, மேலும் மேலும் அதிகமாய்க் குடித்தால்த் தான் இந்தப் பயன் உண்டாகும். முடிவில் அறிவு அடியோடு கெட்டு உடல் உணர்ச்சியும் அற்றுப்போய்விடும். சொற்ப நேரம் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக, இப்படி உடம்பையும் அறிவையும், ஆத்மாவையும் அடியோடு பாழாக்கிக்கொள்வது நல்லதா என்று சிந்தித்துப் பாருங்கள்.

அப்படியானுல், களைப்புத் தீர்வதற்குச் சரியான வழி தான் என்ன? மூளை சிகிச்சையில் பெயர்பெற்ற சேர் மாரிஸ் கிரேக் என்பவர் சொல்லுகிருர்:

நன்ருய்த் தூங்குங்கள். தசைநார்களின் களைப்பைப் போக்கிப் புதிய பலம் தரும் அரும் மருந்து தூக்கமே யாகும். இதற்கு மதுவின் உதவியைத் தேடவேண்டாம் மதுபானத்தினுல் உண்டாவது மயக்கம்; தூக்கமன்று. இந்த மயக்கம் விளைவதற்கும்கூட நாளுக்குநாள் குடியின் அளவை அதிகரிக்க நேரிடும்.''

உழைத்து வேலைசெய்யும் தொழிலாளர்கள் நல்லுணவு அருந்தி, தூய காற்றுள்ள இடத்தில் படுத்துத் தூங்க வேண்டும். களைப்பு நீங்குவதற்கு இதைவிடச் சிறந்த உபாயம் வேறு கிடையாது.

— 'விமோசனம்'
சுக்ல (1929) மார்கழி
நன்றி: குமரி மலர்

---

தன் கருத்தைத் தன்னிடமே அடக்குவதைவிட, ஒரு சிலையினிடமோ, ஒரு படத்தினிடமோ கூற முடியுமானுல், அங்ஙனம் கூறுவது கூட மனிதனுக்கு நற்பயன் தரும்'

நண்பனில்லாவிட்டால், வாழ்க்கை மேடையில் மனிதனுக்கு மிகுதி இடமில்லை. அவன் வாளா வெளிச் செல்ல வேண்டியவனே ஆவான்.

— பிரான்ஸிஸ் பேக்கன்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தையே வருக!........

தலுக்கு அதிகமான செம்பு, பித்தளை, வெண்கலம்; வெள்ளி ஆகிய பழைய பாத்திரங்களும், பொன்னுக்குப் பதிலாகப் பணமும் தந்து பெரும்பணி தூண்ட உதவினுர்கள். சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம் அவர்களும், செய்தி ஆசிரியர் சைவப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்களும் அறுபத்துமூவர் பற்றிப் பல கல்லூரிகளில் பேசித் துணைபுரிந்தார்கள்.

சென்ற காலத்துப் பழுதிலாச் சேவை இந்த ஆண்டிலும் இனிது தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும். தொண்டு மனப்பான்மையுள்ளவர் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள். விவசாய வளர்ச்சிக்கு விதைகள், நாற்றுகள், கன்றுகள், கொடுத்துதவுங்கள். அப்போதைக்கு இப்போதே சொல்லிவைக்கிருேம். இந்த ஆண்டிலும் எமக்கு இலட்சக்கணக்கான பனம் விதைகள் தேவை. இரண்டு கைகளையும் நீட்டி இரந்து கேட்கிருேம். பனம் விதை தாரீர். பனைவளம் பெருக்க வாரீர். ★

---

## யாருக்கு மோட்சம்?

சமவயதினராகிய மூவர் இளமையில் ஒன்ருகப் படித்தவர்கள் வெவ்வேறிடங்களில் வேலைபார்த்தனர். தங்கள் ஓய்வுநேரங்களில் சமயநூல்களை நன்ருகப் பாடங்கேட்டும் படித்தும் நெட்டுப்பண்ணியவர்கள். முதுமையில் உத்தியோக ஓய்வுபெற்றபின் பழையபடி ஓரிடத்திலே கூடி வாழ்ந்தனர். தங்களுள் மோட்சத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்துப் பேசும்போது தாம்தாம் முதலில் மோட்சம் அடைவதாகப் பெருமை பேசிவந்தனர்.

நான்கு வேதங்கள், வேதாங்கங்கள், புராணங்கள் யாவற்றையும் நன்குணர்ந்தவன். எனக்கே முதலில் மோட்சம் என்ருர் ஒருவர்.

நான் வேதங்களோடு பிரஸ்தானத்திரயம் என்னும் பிரம்மசூத்திரம், உபநிடதம், பகவத்கீதை எல்லாம் படித்தவன். நானே முதலில் மோட்சம் அடைவேன் என்ருர் மற்றவர்.

நான் வேத வேதாங்கங்களோடு ஆகமங்கள், திருமுறைகள், சித்தாந்தங்கள் யாவும் கற்ற வல்லவன். நானே மூவருள்ளும் முதலில் மோட்சம் அடைவேன் என்ருர் மூன்ருமவர்.

இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவ்வழியே போன ஒரு பெண் ''நான் போனுல் மோட்சம் போவேன்'' என்ருள்.

அம்மா நீ எங்களிற் பார்க்க அதிகமாக என்ன படித்துள்ளாய், எங்களை முந்திக்கொண்டு மோட்சம் போவதற்கு என்ருர் ஒருவர்.

பெரியவர்களே நான் மோட்சம் போவேன் என்று கூறவில்லை. நான் என்னும் அகம்பாவம் போனுல் மோட்சம் போகலாம் என்றுதானே கூறினேன் என்ருள் அவள். மூவரும் அநுபவ அறிவுபெற்று அடங்கினர். ★

---

**★ பகலில் துயின்ருல் பலவித நோய்வரும் ★**

# கண்ணப்ப நாயனுர்

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன் என்று சுந்தரமூர்த்தி நாயனுரால் போற்றப்பெற்ற கண்ணப்ப நாயனுர், சங்கராச்சாரியாராலும் அவரின் பெரும் பக்திக்காகப் போற்றப்பெற்றவர். அன்பின் திருவுருவென்று சேக்கிழார் சுவாமிகள் போற்றிப் பணிந்த இந்த நாயனுர் கல்வியறிவில்லாத வேடர் குலத்துதித்தவர்.

பொத்தப்பி நாட்டிலே உடுப்பூரிலே வேடர் தலைவனுன நாகன் என்பானுக்கு அவன் மனைவி தத்தை என்பாள் வயிற்றுப் பிறந்து திண்ணனுர் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று, வளர்பிறைபோல் வளர்ந்து வேட்டையாடப் போனபோது காட்டிலே ஒருமலையுச்சியிலே சிவலிங்கப் பெருமானைக்கண்டு அன்புகொண்டு அழுது கும்பிட்டு அவரைவிட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்து, அவர் பசிக்குத் தாம் உணவுகொடுக்க வேண்டுமென்று இறைச்சியும் தேனும் படைத்து வந்த நாளிலே, அவரின் உண்மை அன்பினை அர்ச்சகருக்குக் காட்டுவதற்காக இறைவன் தமது வலக்கண்ணிலிருந்து இரத்தம் சொரியச்செய்தார். அதனைக் கண்ட திண்ணனுர் பலவித பச்சிலைகளையும் பிழிந்து மருந்து செய்தும் அது நிற்காததால், தமது கண்ணையே தோண்டி எடுத்து இறைவன் கண்மீது அப்பினுர். அதனுல் நோய் குணமானதும் அவர் ஆனந்தக் கூத்தாடி நின்ற போது, இறைவனின் இடக்கண்ணினின்றும் இரத்தம் சொரிந்தது. உடனே திண்ணனுர் தமது இடக்கண்ணையும் தோண்டி இறைவனுக்கு அப்புவதற்கு முற்பட்டபோது இறைவன், ''கண் அப்பனே பொறு'' என்று தடுத்து அவரைத் தம் வலப்பக்கத்தில் நில் என்று கூறி அருள் செய்தார். அன்பின் திருவுருவாகிய கண்ணப்ப நாயனுர் திருநாள் 31-1-77 திங்கட்கிழமை வருகின்ற மிருகசீரிட நாளாகும். ★

# அமரர் சிவகுருஜி

கல்கி என்னும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆனந்த விகடனில் இருந்த காலத்தில் இலங்கைக்கு முதன் முதலாக வந்தபோது, சிவகுருஜீ பிறந்த நாட்டைப்பார்க்க விரும்பி இங்கே வந்ததாகக் கூறினுர்.

சிவகுருநாதன் என்னும் இளைஞன் யாழ்ப்பாணம் குருநாத சுவாமி கோயிலடியைச்சேர்ந்த முத்தர் சின்னத் தங்கம் தம்பதிகளின் மூன்ருவது புதல்வர். மத்திய கல்லூரியில் படித்த காலத்திலேயே காந்தி அடிகளின் போக்கில் அபிமானமும் ஆசையும்கொண்டு அவரின் ஆச்சிரமத்தைச் சென்றடைந்து தொண்டுசெய்துவந்தவர். காந்தியடிகளின் நெறிகளில் வரன் முறை பிசகாது தொண்டு செய்து அடிகளாரின் அன்புக்குப் பாத்திரரானவர்.

திருச்செங்கோட்டிலே இராஜாஜி அவர்கள் 1925ஆம் ஆண்டில் நிறுவிய காந்தி ஆச்சிரமம் அரும்பணியாற்றி 1975 ஆம் ஆண்டில் பொன்விழா மலர் வெளியிட்ட போது, தொண்டர் சீர்பரவுந் தன்மையில் வேதமூர்த்தி அவர்கள் அம்மலரில் சிவகுருநாதனைப்பற்றி எழுதிய வாசகம் வருமாறு'

அந்நாட்களில் எல்லோராலும் லங்காதிபதி என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த இவர் 1922 இல் சபர்மதி ஆச்சிரமத்தில் சேர்ந்து பயிற்சி பெற்ருர். 1923 இல் திருப்பூர்க்கருகிலுள்ள தமிழ்நாடு காதிபோர்ட்டில் பயிற்சிப் பொறுப்பாளராகப் பணிபுரிந்த இவர், வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தேசத்தொண்டருங்கூட. 6-2-25 இல் காந்தி ஆச்சிரமத்தில் அதன் ஆரம்ப நாளிலேயே சேர்ந்து ஆச்சிரமத்தின் பல பிரிவுகளைக் கண்டார். 1927 இல் இராஜாஜியுடனும் காந்தியடிகளுடனும் இலங்கைக்குச் சென்றுவந்த இவர், 1930 இல் வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு இராஜாஜியுடன் ஒரு வருட காலம் பெல்லாரி மத்திய சிறையில் கழித்த தேசியவாதி. 1931 இல் சிறையிலிருந்து விடுதலை பெற்ற இவர் 1937 இல் காந்தி ஆச்சிரமம் பணியிலிருந்து விலகினுர்.

அகில இந்திய நூற்போர் சங்கத்தின் கிளைகளுள் ஒன்ருன வீரபாண்டி வித்தியாலயத்தில் பணிபுரிந்து வந்தார். 1940 இல் வங்கமாகாணப் பஞ்ச நிவாரணத்திற்குத் தன்னுல் முடிந்தவரை பொருளுதவியையுஞ் செய்த கருணை மறவர். இப்படி அரசியலிலும், பொதுத் தொண்டிலும், தன் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்த இவர், மத்திய அரசு, மாநில அரசு வெளியிட்ட அண்ணல் காந்தி அடிகள் பற்றிய நூல்களையும், அதுசம்பந்தமான மற்ற கருத்துரைகளையும் அயல் நாடுகளில் விற்பனை செய்து, நமது தேச பாரம்பரியத்தையும் காந்தியக் கொள்கைகளையும் பரப்ப உதவிய, உதவிக்கொண்டிருப்பவருமான சிறந்த காந்தியத் தொண்டர். ★


# நீம் சுகாதார சோப்

நீங்கள் நீராடும்போது நீம் சுகாதார சோப் உங்கள் உடம்பில் உள்ள அழுக்கை நீக்குவதோடு தேகசுகத்தையும் தருகிறது. சுத்தமான வேப்பெண்ணெய் கலந்த நீம் சுகாதார சோப் இயற்கை அன்னையின் இணையற்ற உபகரிப்பு. நீம் சுகாதார சோப்பினுல் அழுக்கு நீக்கமும் தேகாரோக்கியமும் உண்டாகிறது.




தரமான தயாரிப்புகளுக்குப் பெயர்பெற்ற
மில்க்வைற் தாபனம்
நீம் சுகாதார சோப்பைத் தயாரிக்கிறது.


யாழ்ப்பாணம், சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம். 1-1-77.